**வலயக்கல்வி அலுவலகம் - மூதூர்**
**Zonal Education Office -Mutur**

**இறுதிக்கணிப்பீடு – 2021 (2022)**

| | | |
|---|---|---|
| **தரம் - 09** | **தமிழ்மொழியும் இலக்கியமும்** | **2 மணித்தியாலம்** |
| **சுட்டெண் -..........................** | **பாடசாலை -............................** | |

பகுதி - 01

❖ **மிகப்பொருத்தமான விடையின்கீழ் கோடிடுக.**

1. ‘பெரும்பாம்புகள் போல் பயம் மேம்படச்செய்தன................’ பாம்பு என்பதன் ஒத்த சொல்.

   1. கோகிலம் 2. அரவம் 3. அஞ்சுகம் 4. கூதை

2. நறுந்தருக்கள் வழிநெடுகிலும் நிழல் தரட்டும் இங்கு தரு என்பதன் ஒத்தசொல்.

   1. மலர் 2. பசு 3. மரம் 4. கிளை

3. அவர் சந்தித்த தோல்விகள் ஏராளமாக இருக்கும் தோல்வி என்பதன் எதிர்ப்பதம்.

   1. வெற்றி 2. வருத்தம் 3. தோற்றல் 4. சாதனை

4. மன்னன், ஆனாதைகளுக்கும்,விதவைகளுக்கும் விசேடவாழ்வாதாரத் திட்ங்களை வகுத்தான் இவ்வாக்கியத்தில் அமைந்துள்ள இருபாற்பொதுப்பெயர்.

   1. மன்னன் 2. ஆனாதை 3. விதவை 4. வகுத்தான்

5. ‘கொடியோர் கூட்டமே அழிந்தொழிக’ இவ்வாக்கியம்.

   1. கூற்றுவாக்கியம் 2. வினாவாக்கியம் 3. கலப்புவாக்கியம்
   4. வியங்கோள் வாக்கியம்

❖ **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

6. இவ்வுலகில் வாழும் ஒருவரின் எதிர்கால நிகழ்வுகளை பற்றி அறியும் ஆற்றல் படைத்தவனைக்குறிக்கும் சொல்

   1. நாத்தீகன் 2. சோதிடன் 3. தீர்க்கதர்சி 4. தவசி

7. ‘நாடிமட அன்னத்தை நல்ல மயிற்குழாம் ஓடி வளைக்கின்றது ஒப்பவே....’ இங்கு வந்துள்ள அணி.

   1. உருவகம் 2. உவமை 3. எதுகை 4. மோனை

8. கடிதம் என்பதற்கு பயன்படுத்தப்படும் மற்றோர் சொல்.

   1. பனுவல் 2. நுதல் 3. திருமுகம் 4. அறிமுகம்

9. தாய் குழந்தைக்கு உணவு ஊட்டினாள் இதில் ஊட்டினால் என்பது எவ்வகை வினை.

   1. தன்வினை 2. செய்வினை 3. பிறவினை 4. கூட்டுவினை

10. கம்பனால் பாடிய பாடல் இவ்வாக்கித்தில் இடம்பெறும் உருபு யாது?

1. யா 2. ஆ 3. அன் 4. ஆல்

❖ **கீறிட்ட இடங்களுக்கு பொருத்தமான விடையினை தெரிவு செய்க.**

11. மலையக பிரதேசத்தில் உண்டான மண்சரிவினால் அங்கவீனமுற்றோரை கண்ட அவளது கண்களில் இருந்து கண்ணீர்............................. எனச் சொரிந்தது.

1. கடகட 2. மளமள 3. பொலபொல 4. சலசல

12. திருடன்................................ அகப்பட்டுக்கொண்டான்.

1.வெட்கி விறைத்து 2. விதிவிலக்கு 3. கையும்மெய்யுமாக 4. சப்புச்சவர்

13. முற்காலத்தில் மாணவர்கள் செய்யுள்களை மனனம் ................................

1. செய்கிறார்கள் 2. செய்தார்கள் 3. செய்தனர் 4. செய்வார்கள்

14. எடிசன் தன் இலக்கில்................................... இருந்தார்.

1. நுனிப்புல் மேய்தல் 2. கண்ணும் கருத்துமாக 3. எழுத்தெண்ணி 4.குறையும் நிறையும்

15. அறிவும் கருணையும் மிக்கவன் என் மனைவி..................வழு இடம்பெற்றுள்ளது.

1. திணை 2. மரபு 3. கால 4. பால்

❖ **சரியான விடையை தெரிவு செய்க.**

16. ‘அடியொற்றல்’ எனும் மரபுத்தொடர் உணர்த்துவது.

1. பின்பற்றுதல் 2. கண்மூடுதல் 3. கீழ்ப்படிதல் 4. அன்பு குறைதல்

17. மெய்முன் மெய்புணரும் புணர்ச்சிச்சொல்.

1. நிலம் + சரிவு 2. பொன் + ஆபரணம்3. முள் + ஐ 4. கடல் + அலை

18. மூன்றாம் வேற்றுமையின் சொல்லுருபாக வருவது.

1. ஆல்,உடன் 2. கொண்டு,ஐ 3. இருந்து,காட்டிலும்

4. கொண்டு,உடன்

19. வதனமதி இங்கு எவ்வகை அணி பயிலப்பட்டுள்ளது.

1. உவமை 2. உருவகம் 3. மோனை 4. உருவகம்

20. முன்னொட்டுக்களாக கொள்ளப்படுவது.

1. பிற்காலம் 2. நியாயவாதி 3. தனிமை 4. உடன்பாடு

21. நீருனுள் நீந்திய முதலையை கமால் கண்டான் இங்கு இடம்பெற்றுள்ள பெயெரெச்சம்.

1. நீருனுள் 2. நீந்திய 3. முதலை 4. கமால்

22. அழகிய கூந்தலை உடைய மாது மெதுவான நடையினை உடையவள் இதில் இடம்பெற்ற அடைமொழிகளாவன.

1. கூந்தலையுடைய 2. அழகிய,மாது 3. அழகிய ,மெதுவான

4. நடையுடையவள்

23. பின்வரும் சொற்களுள் பெயராகவும் வினையாகவும் வரும் சொல்.'.

1. தட்டு 2. நூல் 3. சிரி 4. மடு

24. தந்தை மகளுக்கு எழுதிய கடிதத்தின் வகை.

1. நிறுவனக்கடிதம் 2. உறவுமுறைக்கடிதம்
3.தொழின்முறைக்கடிதம் 4. அழைப்பாணைக்கடிதம்

25. மாட்டின் தொகுதி பட்டி என்பது போல மயிலின் தொகுதி.

1.கூட்டம் 2. குழாம் 3. தொகுதி 4. தோப்பு

26. முன்னம் அன்னம் கன்னம் இங்கு இரண்டாவது எழுத்து ஒன்றித்து வருவது.

1. எதுகை 2. மோனை 3. உவமை 4. சிலேடை

27. பின்வருவன வற்றுள் பிறவினை விகுதிகளாக அமைவன.

1. இல்,அல் 2. வி,பி 3. க,ய 4. அட்டும்

28. முயற்சி திருவினையாக்கும் அதனால் கடுமையாக உழைத்து முன்னேறுங்கள் இங்கு வந்துள்ள இணைப்பிடைச்சொல்.

1. முயற்சி 2. அதனால் 3. உழைத்து 4. கடுமையாக

29. மனிதனுக்கு மன நிறைவை போல சுகமளிக்கும் செல்வம் வேறோன்றும் இல்லை என்பனை உணர்த்தும் பழமொழி.

1.பேராசை பெரும் தரித்திரம்.
2. பொறுத்தார் பூமி ஆழ்வார் பொங்கியவர்காடாழ்வார்.
3.குறைகுடம் தளம்பும் நிறைகுடம் தளம்பாது .
4.போதும் என்ற மனமே பொன்செய் மருந்து.

30. ஒழுங்கின்றி அமைந்திருக்கும் வாக்கியங்களை ஒழுங்கு செய்தால் சீரான பந்தி ஒன்று அமையும் அதன் ஒழுங்கான வைப்புமுறை

1. ஆதலால் எமது கடமையில் இருந்து வழுவாது நடப்போம்
2. எனது ஆசானின் வழிகாட்டலில் செல்வேனாயின் எனது வாழ்வு மிளிரும்
3. எனது ஆசான் ஒழுக்கத்துடன் கூடிய கல்வியை புகட்டி எனக்கு வழி காட்டுகிறார்
4. நான் தரம் ஒன்பதில் கல்வி கற்கிறேன்.
5. நல்ல வழி காட்டுகின்ற ஆசிரியரை நாம் மறவாது போற்றுதல் கட்டாயக் கடமையாகும்.

1. 4,3,2,5,1 2. 2,4,3,1.5 3. 3,5,1,4,2 4. 4,5,1,2,3 (30 புள்ளிகள்)

## பகுதி -02

**01. பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றை தெரிவு செய்து 150 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. வாசிப்பு மனிதனை பூரணமாக்கும்
2. ஒற்றுமையே உயர்வு தரும்
3. விஞ்ஞானத்தின் விந்தை
4. மரம் நடுவோம் பயன்பெறுவோம் (20 புள்ளிகள்)

**02. பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றை தெரிவு செய்து 75 கடிதம் அல்லது துண்டுப்பிரசுரம் எழுதுக.**

1. எமது பிரதேசத்தில் தற்போது மழை பெய்து வருகிறது இதனால் டெங்கு நோய் பரவக்கூடிய அபாயம் உள்ளது ஆகவே டெங்குநோயை ஒழிப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரத்திணைக்களத்தலைவருக்கு கடிதம் எழுதுக.
2. ‘சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிப்போம்’ எனும் தலைப்பில் துண்டுப்பிரசுரம் ஒன்று எழுதுக.

(15 புள்ளிகள்)

**03. பின்வரும் சொற்களை பொருள் விளங்கும் வகையில் வாக்கியம் எழுதுக.**

1. பறவை :
2. பரவை :
3. மருப்பு :
4. மறுப்பு : (10 புள்ளிகள்)

**04. பின்வரும் பாடலை வாசித்து கீழ்வரும் வினாவுக்கு விடை தருக?**

ஊருக்கு நல்லது சொல்வேன் - எனக்
குண்மை தெரிந்து சொல்வேன்
சீருக்கெல்லாம் முதலாகும் - ஒரு
தெய்வம் துணை செய்ய வேண்டும்
சாதிக்கொடுமைகள் வேண்டாம் - அன்பு
தன்னிந் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோர் - தொழில்
ஆயிரம் மாண்புறச்செய்வோம்
பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் மீசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாதரறிவை கெடுத்தார்

1. இக்கவிதையில் கூறப்படும் நற்செயல் இரண்டைக் குறிப்பிடுக?
2. உலகம் செழிப்புற அவசியமானது எது?
3. மாதர்களின் அறிவைக் கெடுத்தவர்கள் யார்?
4. பாடலில் இடம் பெற்ற நீதிக்கருத்துக்கள் மூன்று தருக?
5. பின்வரும் சொற்களை பிரித்து எழுதுக?
    1. வளர்த்திடுமீசன்
    2. மாதரறிவு (15 புள்ளிகள்)

- **சுருக்கவிடை தருக.**

05.

01. 'இனிய உளவாக இன்னாது கூறல்
கனியிருக்க காய் கவர்ந்தற்று'
    1. இக்குறளின் கருத்து யாது?
    2. குறளில் கூறப்பட்ட அணியை விளக்குக?

02. நளவெண்பாவை அடிப்படையாகக் கொண்டு விடை தருக?
    1. நளனின் ஆட்சிச்சிறப்பை விளக்குக?
    2. நிடத நாட்டின் சிறப்புக்களை கூறுக?

03. வேற்றுமையை அடிப்படையாகக்கொண்டு விடை தருக,
    1. கருவி வேற்றுமை என அழைக்கப்படுவது எது?
    2. ஏழாம் வேற்றுமை உருபுகளையும் பொருளினையும் குறிப்பிடுக?

04. அணிகளை அடிப்படையாகக்கொண்டு விடை தருக?
    1. உவமை அணி என்றால் என்ன? அதன் உறுப்புக்கள் எவை?
    2. உயர்வுநவிற்ச்சி அணியின் இயல்புகளை குறிப்பிடுக? (10 புள்ளிகள்)